DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 131/2023

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | குமார் |
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது படுவூர் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சபிதா, அஜித்குமார், கோகுல் ஆகியோரை தெரியும். 26.01.2023 ம் தேதி படுவூரில் இருந்து வேலச்சேரிக்கு திருமணத்திற்கு ஆஜர் எதிரியின் வேனில் நானும் என்னுடன் சபிதா, தனலட்சுமி, ஆகாஷ், கவிதா மற்றும் சுமார் 25 நபர்கள் சென்றோம். அப்போது கருங்குழி தாபா ஓட்டல் அருகே மாலை 6.30 மணியளவில் வரும்போது வேனை ஆஜர் எதிரி வேகமாக ஓட்டியதால் வேனின் இடதுபக்க பின் டயர் வெடித்ததால் வண்டி தலைகீழாக கவிழ்ந்தது. விபத்தில் எனக்கு தலையில் அடிபட்டது. மேலும் வேனில் என்னுடன் பயணம் செய்த சபிதா, கவிதா, ஆகாஷ், அஜித்குமார் ஆகியோர் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக் சேர்ந்தோம். மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சபிதா இறந்துவிட்டார். நாங்கள் அனைவரும் மேல் சிகிச்சைக்காக செங்பல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வைத்து கோகுல் மற்றும் அஜித்குமார் இறந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் விபத்து ஏற்பட்ட வண்டியில் பயணம் செய்தேன். விபத்து டயர் வெடித்ததால் தான் ஏற்பட்டது என்றால் எதிரி வேகமாக ஓட்டினார் அதனால் டயர் வெடித்தது, அதனால் விபத்து ஏற்பட்டது. இடது பக்க பின் டயர் வெடித்தது. நான் வண்டியின் வலது பக்க 3 வது சீட்டில் அமர்ந்திருந்தேன். எதிரி வாகனத்தை அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ ஓட்டவில்லை என்றாலும், டயர் வெடித்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், நான் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 131/2023

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கவிதா |
| Father / Husband Name | குமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது படுவூர் கிராமத்தில் வசித்து அங்கன்வாடி மையத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சபிதா, அஜித்குமார், கோகுல் ஆகியோரை தெரியும். 26.01.2023 ம் தேதி படுவூரில் இருந்து வேலச்சேரிக்கு திருமணத்திற்கு ஆஜர் எதிரியின் வேனில் நானும் என்னுடன் சபிதா, தனலட்சுமி, ஆகாஷ், குமார் மற்றும் அஜித்குமார் மேலும், சுமார் 25 நபர்கள் சென்றோம். அப்போது கருங்குழி தாபா ஓட்டல் அருகே மாலை 6.30 மணியளவில் வரும்போது வேனை ஆஜர் எதிரி வேகமாக ஓட்டியதால் வேனின் இடதுபக்க பின் டயர் வெடித்ததால் வண்டி தலைகீழாக கவிழ்ந்தது. விபத்தில் எனக்கு முதுகு தண்டுவடத்தில் கிராக் ஏற்பட்டது. மேலும் வேனில் என்னுடன் பயணம் செய்த சபிதா, குமார், ஆகாஷ், அஜித்குமார் ஆகியோர் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக் சேர்ந்தோம். மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சபிதா இறந்துவிட்டார்.

2. நாங்கள் அனைவரும் மேல் சிகிச்சைக்காக செங்பல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வைத்து அஜித்குமார் மற்றும் மற்றொருவர் இறந்துவிட்டார்கள். நான் 2,3 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். சுமார் 6 மாதம் வீட்டில் பெட் ரெஸ்ட் எடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3. நாங்கள் பயணம் செய்த வண்டி திடீரென்று டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 131/2023

Miscellaneous :

Sessions : PW 9

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஏகாம்பரம் |
| Father / Husband Name | கோவிந்தன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அகூர் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சபிதா, அஜித்குமார், கோகுல் ஆகியோரை தெரியும். தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் படுவூரில் இருந்து சென்னைக்கு திருமணத்திற்காக ஆஜர் எதிரியின் வேனில் சுமார் 25 நபர்கள் போனோம். அப்போது மதுராந்தகம் அருகே வரும்போது வேனின் டயர் வெடித்து விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு கண்ணில் காயம் ஏற்பட்டது மற்றும் என்னுடன் வேனில் பயணம் செய்தவர்களுக்கு அடிபட்டது. என்னுடன் பயணம் செய்த 3 நபர்கள் இறந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நாங்கள் பயணம் செய்த வண்டி திடீரென்று டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் வண்டியின் பின்பக்க இறுக்கையில் அமர்ந்திருந்தேன். இறந்த நபர்களை எனக்கு தெரியும். இறந்த நபர்களுக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 131/2023

Miscellaneous :

Sessions : PW 10

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அஞ்சலை |
| Father / Husband Name | ஏகாம்பரம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அகூர் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சபிதா, அஜித்குமார், கோகுல் ஆகியோரை தெரியும். 26.01.2023 ம் தேதி நாங்கள் படுவூரில் இருந்து சென்னைக்கு திருமணத்திற்காக ஆஜர் எதிரியின் வேனில் சுமார் 25 நபர்கள் போனோம். அப்போது செங்கல்பட்டு அருகே வரும்போது வேனின் டயர் வெடித்து விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு முதுகு மற்றும் தலையில் அடிபட்டது. வேனின் கண்ணாடி என் தலையில் குத்தியது. காயம்பட்ட நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னுடன் பயணம் செய்த 3 நபர்கள் இறந்துவிட்டார்கள். மற்ற நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நாங்கள் பயணம் செய்த வண்டி திடீரென்று டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இறந்த நபர்கள் என் உறவினர்கள் என்றால் சரிதான். இறந்த நபர்களுக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 131/2023

Miscellaneous :

Sessions : PW 11

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சதீஷ் |
| Father / Husband Name | சுரேஷ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது படுவூர் கிராமத்தில் வசித்து கல்லூரியில் படித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சபிதா, அஜித்குமார், கோகுல் ஆகியோரை தெரியும். 26.01.2023 ம் தேதி நாங்கள் படுவூரில் இருந்து சென்னைக்கு திருமணத்திற்காக ஆஜர் எதிரியின் வேனில் சுமார் 25 நபர்கள் போனோம். அப்போது கருங்குழி தாபா ஓட்டல் அருகே வரும்போது வேனின் பின்பக்க டயர் வெடித்து வேன் தலைக்கீழாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் என்னுடன் பயணம் செய்த 3 நபர்கள் இறந்துவிட்டார்கள். மற்ற நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்தில் எனக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை. திடீரென்று டயர் வெடித்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இறந்த நபர்கள் என் உறவினர்கள் என்றால் சரிதான். இறந்த நபர்களுக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 131/2023
Miscellaneous :
Sessions : PW 12
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கோபி |
| Father / Husband Name | சம்பத் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருங்குழி கிராமத்தில் வசித்து பஞ்சர் கடையில் வேலை செய்து வருகிறேன். சாட்சி வெங்கடேசன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா12 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 8.00 மணிக்கு நானும் வெங்கடேசனும் கடையில் வேலைசெய்துக் கொண்டிருந்தபோது போலிசார் ஒரு வேன் விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக சம்பவயிடத்தில் விசாரித்து படம் வரைந்தார்கள், நானும் வெங்கடேசனும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் விபத்து நடந்ததால் வாங்கினார்கள், அதில் என்ன விவரம் இருந்தது என்று படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று போலிசார் படித்து காட்டினார்களா என்றால் இல்லை. நான் தேசிய நெடுஞ்சாலையில் பஞ்சர் கடை வைத்துள்ளேன். போலிசார் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.